2022 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் டெண்டர் விடப்பட்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் ஊருக்குப் போகின்ற தண்ணீருக்கான ஒரு பெரிய திட்டத்தைத் துவக்கி, முடித்திருக்கிறோம். அதுவொரு பெரிய திட்டம். திட்ட மதிப்பீடு கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேல்; அதை முடித்திருக்கிறோம். இன்னும் துவக்க விழா நடைபெறவில்லை. தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அடுத்த ஒரு திட்டம் பற்றி கேட்டிருக்கிறார். அதுபற்றியும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்தாலோசித்து, என்ன செய்ய முடியும் என்பதைத் தெரிவிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 153, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

154—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

***544—முனைவர் T.R.B. ராஜா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சியில் செயல்பட்டு வரும் கட்டக்குடி முழு நேர நியாய விலைக் கடை 769 குடும்ப அட்டைகளுடன் T1527, கட்டக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச்

சொந்தமான தானியக் கிடங்குக் கட்டடத்தில் தற்காலிகமாகச் செயல்பட்டு வருகிறது.

மேற்படி, கட்டக்குடி முழு நேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட, கட்டக்குடி பேரையூர் வருவாய் கிராமத்தில் சர்வே எண் 204–5–ல் 0.11.00 ஏர்ஸில் சங்கத்திற்குச் சொந்தமாக இடம் உள்ளது. ஆனால், சங்கத்தில் நிதி வசதி இல்லை. எனவே, கட்டக்குடி முழு நேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்திடக் கோரி திருவாரூர் மண்டல இணைப் பதிவாளர் அவர்களால், திருவாரூர் மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டதைத் தொடர்ந்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், ரூ.14.08 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, நிதி பெறப்பட்டவுடன், கட்டக்குடி முழு நேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.

முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. கட்டக்குடி கிராமத்தைத் தவிர, ஏறத்தாழ 16 கடைகள் இன்னும் வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. மாவட்ட ஆட்சியர் அவர்கள், MGNREG திட்டத்தின்கீழ், 10 கடைகளுக்கு AS கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் அழுத்தம் தர வேண்டும். அதைத் தவிர, ஏற்கெனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் (MLACDS) 1 கோடியே 51 இலட்சம் ரூபாய் நிதியை 19 கடைகளுக்குக் கொடுத்து உதவி வருகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதற்குக் கொஞ்சம் அழுத்தம் கொடுத்து, அந்தக் கடைகளைத் கட்டித் தர வேண்டும்.

திருவாரூர் மாவட்டத்தில் 734 கடைகள் இருக்கின்றன. அங்கு, இன்னும் 94 Salesmen–ம், 10 Packers–ம் தேவைப்படுகின்றனர். அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கோரி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கி, முதல் கேள்வியோடு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

2022 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே பகுதி நேரக் கடைகளுக்கெல்லாம் கட்டடம் கட்டுவதற்காக நிதி வழங்கியிருப்பதாகத் தெரிவித்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா அவர்கள், அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, இன்னும் அதிகமான நிதியைக் கொடுத்துவிட்டால் நன்றாக இருக்கும். அங்கு கிட்டத்தட்ட 700–க்கும் மேற்பட்ட கடைகள் இருக்கின்றன. அவர் பணம் அதிமாகக் கொடுத்துவிட்டால், அவற்றை முழுமையாகவே கட்டிக் கொடுக்கலாம். ஏனென்றால், கட்டக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் தற்போது நிதி ஆதாரமே இல்லை. அது தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வரக்கூடிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம். குவிந்த நட்டத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஆகவே, அந்தத் துறையின் மூலமாக பணி செய்வதற்கு வாய்ப்பு இல்லை. எனவேதான், ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக இப்போது நாம் பேசியதையடுத்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலமாகவும், சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியினையும் பெற்று நாம் இந்தக் கடைகளைக் கட்டவிருக்கிறோம். ஏற்கெனவே, இதே சட்டமன்றத்தில் கடைகள் கட்டுவதற்காக வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பினைத் தொடர்ந்து, 500 கடைகள் கட்டுவதற்கு இந்த ஆண்டு கண்டிப்பாக அனுமதி வழங்கப்பட்டு, கட்டடப் பணிகள் துவங்குவதற்கான முயற்சியை இப்போது தொடர்ச்சியாக மேற்கொண்டிருக்கிறோம். ஏனென்றால், கிட்டத்தட்ட 7,000 கடைகள் வரை அதாவது, 6,162 முழுநேரக் கடைகளுக்கு இன்னும் சொந்தக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கின்றது; வாடகைக் கட்டடங்களில்தான் அவை இயங்கி வருகின்றன; 773 பகுதி நேரக் கடைகளும் இருக்கின்றன. இவற்றைத்தான்* phased manner*–ல் நாம் முழுமையாகக் கட்டி முடிக்க வேண்டும் என்று முடிவெடுத்திருக்கின்றோம்.*

தற்போது நியாய விலைக் கடைகளில் இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு துறை அதிவேகமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2022 ஏப்ரல் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.

முற்பகல் 10—20

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், கேள்வி நேரத்தின்போது ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் வருடத்திற்கு இரண்டு நியாய விலைக் கடைகள் கட்டுவதற்கு நிதியொதுக்க வேண்டுமென்று கடந்த வாரம் ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். நான், எனது தொகுதி மேம்பாட்டு நிதி, 2021–2022–லிருந்து 5 நியாய விலைக் கடைகள் கட்டுவதற்கு நிதியொதுக்கியுள்ளேன். ஆனால், கடலூர் மாவட்ட நிர்வாகம், 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நியாய விலைக் கடைகள் கட்ட முடியாது, கூடுதலாக அதாவது, 14 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கித் தர வேண்டுமென்று கேட்கின்றது. இந்தப் பிரச்சினை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட துறைக்கு 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நியாய விலைக் கடை கட்டுவதற்கு ஆலோசனை வழங்குவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன் அவர்கள் ஏற்கெனவே நிதி வழங்கியிருக்கிறார்கள். கடந்த கால அரசு, முழுநேர நியாய விலைக் கடைக்கு 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ததால், முழு நேரக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு ஒரு type design இருக்கிறது. 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஏற்கெனவே அந்தக் கட்டடத்தினுடைய அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. நிதி கூடுதலாக இருப்பதால், இப்போது நாம், 10 இலட்சம் ரூபாய் போதும் என்று அந்தக் கட்டடத்தினுடைய design–ஐ மாற்றியிருக்கிறோம். முழு நேரக் கடைக்குக் கொடுத்தோம் என்றால், ஒரு சட்டமன்ற உறுப்பினர் வருடத்திற்கு ஒரு கடைக்குதான் கொடுக்க முடியும். பகுதி நேரக்

2022 ஏப்ரல் 22]

கடைக்கு 7 இலட்சம் ரூபாய் என்றால், 2 அல்லது 3 கடைகளுக்குக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்ன கருத்தின் அடிப்படையில்தான், இதற்குப் போதுமான அளவு எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு, இப்போது 10 இலட்சம் ரூபாயில் முழு நேரக் கடையும், 7 இலட்சம் ரூபாயில் பகுதி நேரக் கடையும் கட்டுவதற்காக ஒரு type design-ஐ நாம் தேர்வு செய்திருக்கிறோம். ஏற்கெனவே நீங்கள் முழு நேரக் கடைக்கு நிதியொதுக்கீடு செய்து, அதற்காக மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்குவதில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால், நான் நேரடியாகப் பேசி, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதோடு ஒரு சிறிய விஷயம். கிளை நியாய விலைக் கடைகளுக்கு 6 இலட்சம் ரூபாய்க்கு ஒரு type design போட்டு, 200 சதுர அடியில் ஒரு கழிவறை, கடைக்கு முன்பு ஒரு சாய்வாகக் கூரை அமைத்துக் கொடுப்பதற்கு 6 இலட்சம் ரூபாய்க்கு பொதுப் பணித் துறை அனுமதித்திருக்கிறது. நான், 15 கடைகளுக்கு 90 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறேன். அந்த அடிப்படையிலே நீங்கள் இதையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: 6 இலட்சம் ரூபாய்க்கு type design போடவில்லை. 6 இலட்சம் ரூபாயில் கட்ட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் போட்டு, பொதுப் பணித் துறையின்மூலம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அது நீங்கள் உருவாக்கியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுப் பணித் துறைமூலம், அவர்களின் அனுமதியுடன் கொடுத்திருக்கிறேன். அவர்கள்தான் அந்த estimate போட்டுத் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: பொதுப் பணித் துறை அனுமதியுடன் கொடுத்திருப்பதாகச் சொல்கிறீர்கள். சரி, உங்கள் ஆலோசனையைச் சொல்லுங்கள். அது சரியாக இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன் அவர்கள்.

[2022 ஏப்ரல் 22

திரு. செ. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் வணக்கம். எனது பரமக்குடி தொகுதி, பரமக்குடி town–ல் பெரும்பாலான மக்கள் தண்ணீருக்கு சிரமப்படுகிறார்கள். பரமக்குடியில் ஒரு தடுப்பணை கட்டிக் கொடுத்தால் தண்ணீரை சேமிக்கலாம். Borewell அதிக ஆழமாகப் போட்டுக்கொள்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இதுவரை எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. முதல் முறையாக இதைக் கேட்டிருக்கிறீர்கள். நன்றி. இந்தக் கேள்வி தண்ணீர் சம்பந்தப்பட்டது இல்லை. இந்தக் கேள்வி, கிளை நியாய விலைக் கடை அல்லது நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவது சம்பந்தமானது. அதற்குக் கேள்வி இருக்கின்றதா? (குறுக்கீடு) இருங்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே இந்தக் கட்டடங்கள் கட்டுகின்றபோது ஒரே type design–க்கு இரண்டு துறைகளில் estimate வேறுபடுகின்றது. Rural Development and Panchayat Raj Department–ல் இரண்டு வகுப்பறைகள் கட்டுவதற்கு 16 இலட்சம் ரூபாய் estimate கொடுக்கிறார்கள். அதே type design–ஐ Public Works Department–ல் கொடுத்து கட்ட வேண்டுமென்று பணித்தபோது 24 இலட்சம் ரூபாய் estimate கொடுக்கிறார்கள். பொதுவாகவே, எல்லாத் துறைகளுக்கும் building–ஐ பொறுத்தவரையில் basic ஆக Public Works Department–ன் estimate–ஐத்தான் நாம் எடுத்துக்கொள்வோம். ஆனால், இந்த இரண்டு துறைகளிலும் ஒரே type design–ல் மாறுபட்ட estimate வருகின்றது. (குறுக்கீடு) மாறுபட்டு கொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. செந்தில்பாலாஜி அவர்களுக்குச் சொல்கிறேன். இரண்டு வகுப்பறைகளுக்கு அந்தப் பள்ளி Union–ல் இருப்பதனால் Rural Development and Panchayat Raj Department–ல் estimate வாங்கினேன். அவர்கள் 16 இலட்சம் ரூபாய் என்று கொடுக்கிறார்கள். பின்பு Public Works Department–க்கு அனுப்பினால், அவர்கள் 24 இலட்சம் ரூபாய்க்கு estimate கொடுத்தால்தான் கட்ட முடியும் என்று தகவல்கள் வருகின்றன. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, basic ஆக schedule of rate, Public Works Department rate–ஐ வைத்துத்தான் நாம் estimate–ஐப் போடுகின்றோம்.

2022 ஏப்ரல் 22]

இதில் ஏன் இந்த variation *என்பதனை விளக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுகொள்கிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்,* PWD–*னுடைய மதிப்பீட்டுக்கும், உள்ளாட்சித் துறையினுடைய மதிப்பீட்டுக்கும் வேறுபாடு இருப்பதை இங்கே சுட்டிக்காட்டினார்கள். அது உண்மைதான். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டீர்களென்றால், அந்தந்த பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடியவர்களுக்கு கூட்டுறவுத் துறை* Commissioner *மூலமாக டெண்டர் விட்டு நாம் ரேஷன் கடைகளைக் கட்டுகிறோம். பெரும்பாலும் அது* PWD–*க்கு போகாது. பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதாக இருந்தால்தான் பெரும்பாலும் பொதுப் பணித் துறைக்குச் செல்லும். பொதுப் பணித் துறையின் மதிப்பீட்டுக்கும், உள்ளாட்சித் துறையினுடைய மதிப்பீட்டுக்கும் வேறுபாடு இருப்பதை நீங்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோதே அதற்கு ஒரு முடிவு எடுத்திருக்கலாம். தற்போது, அதுபற்றி மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முடிவு எடுப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நியாய விலைக் கடைகள் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்தும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால், கூட்டுறவுத் துறையினுடைய நிருவாகத்தில் இருப்பவர்கள் கட்டப்பட்டுள்ள அந்தக் கட்டடங்களில் கடைகளைத் திறக்காத காரணத்தினால், இன்றைக்கு பல கடைகள் திறக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்தும் கட்டப்படுகின்ற அந்தக் கூட்டுறவு நியாய விலைக்*

கடைகளை உடனடியாக துறை எடுத்துக் கொள்ளக்கூடிய வகையில் அரசு ஆணை பிறப்பிக்குமா? அதுமட்டுமல்லாமல், கூட்டுறவு நியாய விலைக் கடைகள் முக்கியமான கடைகளாக இருக்கின்ற காரணத்தினால், 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் எடுக்கக்கூடிய பணிகளில் அதற்கு முன்னுரிமை கொடுத்து, உள்ளாட்சித் துறையின் மூலமாகக் கூட்டுறவு நியாய விலைக் கடைகளை அனைத்து பகுதிகளிலும் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் சொல்வதைப்போல, எங்கேயாவது நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு அந்தக் கட்டடங்கள் செயல்படாமல் இருந்தால், அது எந்தக் கடை என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், எந்தச் சட்டமன்ற உறுப்பினர் சம்பந்தப்பட்ட தொகுதிக்குட்பட்ட கடைகள், அப்படிச் செயல்படாமல் இருக்கக்கூடிய கடைகள் எதுவென்று எங்களுக்குத் தெரிவிக்கப்படுமானால், அவை திறக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதை அறிந்து, அந்தக் கடைகள் திறப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. அது என்னவென்றால், இப்போது ஒரு நியாய விலைக் கடையில் 4 கிராமங்கள் வருகிறதென்றால், பகுதி நேர நியாய விலைக் கடையோ, முழு நேர நியாய விலைக் கடையோ வருகின்றபோது, ஏதாவது ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே கடை இருக்கக் கூடாது; நாங்கள் பழைய கடையிலேயே ரேஷன் பொருட்களை வாங்கிக்கொள்கிறோம். ஏற்கெனவே செயல்பட்ட முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து பகுதி நேர நியாய விலைக் கடையாகப் பிரிக்கப்படுகின்றபோது, சில கிராமங்களைச் சேர்ந்தவர்கள் நாங்கள் அந்தக் கடைக்குச் சென்று பொருட்களை வாங்க முடியாது என்று சொன்னால், ஏற்கெனவே முன்பு இயங்கிக் கொண்டிருந்த கடைக்கே சென்று, அவர்களுடைய வசதிப்படி பொருட்களை வாங்குகின்ற நிலை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. ஆக, மக்களுடைய வசதிப்படிதான் கடைகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அப்படி இருக்கின்ற சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர்

2022 ஏப்ரல் 22]

அவர்கள் சொன்னதைப்போல இருக்கின்றபட்சத்தில், குறிப்பிட்டுச் சொன்னால், அதை நிவர்த்தி செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக நியாய விலைக் கடைகள் கட்டுவதற்கு priority *கொடுத்து கட்ட வேண்டுமென்று சொல்கின்றார்கள். இன்றைக்கு, அதனுடைய பல்வேறு பணிகள் ஊராட்சித் துறையின் மூலமாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலமாக அரசின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்கள் பேசியிருக்கிறோம். கண்டிப்பாக, இந்த ஆண்டு கூட்டுறவுத் துறையின்மூலம் நியாய விலைக் கடைகள் கட்டுவதற்குரிய நிதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு நல்ல முறையில் அது செயல்படுத்தப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.C. *கருப்பணன் அவர்கள்.*

திரு. K.C. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 90 இலட்சம் ரூபாய் வரையறுக்கப்பட்ட நிதி கொடுத்திருக்கிறீர்கள். அதில், அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான* provision *மட்டும் இருக்கின்றது. ரேஷன் கடை கட்டுவதற்கு* provision *கொடுக்கப்படவில்லை. ஆக, அதற்கும் சேர்த்து கொடுக்க வேண்டும். ஏனென்றால், ரேஷன் கடையைப் பற்றி உங்களுக்கு அதிகமாகத் தெரியும். ரேஷன் பொருட்களைப் பாதுகாக்கின்ற ஓர் இடமாக அது இருக்கின்றது. வரையறுக்கப்பட்ட ரூ.90 இலட்சம் நிதியில் கட்டுவதற்கான அனுமதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்தால், இன்னும் நிறைய ரேஷன் கடைகள் கட்டுவதற்கான வாய்ப்புகள் இருக்கும். என்னுடைய தொகுதியில் பார்த்தீர்களென்றால், அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது*

ஆச்சரியமாக இருக்கின்றது. வரையறுக்கப்படாத நிதியே ரூ.2 கோடியே 10 இலட்சம் வரை இருக்கிறது. ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது வரையறுக்கப்படாத நிதி 2 கோடி ரூபாய் வரை இருக்கிறது. கண்டிப்பாக, நீங்கள் கொடுக்கலாம்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

155—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***22058—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி அமைந்திருக்கும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், 6 அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 20 சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், பொள்ளாச்சி தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு அன்பான காலை வணக்கம்.*